RESEARCH ARTICLE

INTERNATIONAL RESEARCH JOURNAL OF TAMIL
சர்வதேசத் தமிழ் ஆய்விதழ்

DOI: 10.34256/irjt224s1910

OPEN ACCESS

# மணிமேகலை காட்டும் அறக்கோட்பாடுகள்

**இரா. சுமதி** [அ, *]

[அ] தமிழ்த்துறை, பூ.சா.கோ. கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்-641014, தமிழ்நாடு, இந்தியா

# Moral Ideas in Manimegalai

**R. Sumathi** [a, *]

[a] Department of Tamil, P.S.G. College of Arts and Sciences, Coimbatore-641014, Tamil Nadu, India

* Corresponding Author: sumathivadivelmurugan@gmail.com

Received: 19-07-2022
Revised: 24-09-2022
Accepted: 13-10-2022
Published: 10-12-2022

Check for updates

**ABSTRACT**

Every period record different types of moral ideas. The special characteristics of morality is found in Tamil literature. There are moral messages in other literature too. Manimegalai is filled with moral ideas. As Manimegalai is a Buddhist scripture, the teachings of virtue and emphasis on virtue is must. Moral ideas are explained in Manimegalai through small short stories. The moral ideas in Manimegalai are very useful. Virtuous actions are necessary for human beings to acquire the best qualities. Likewise, moral thinking is necessary for a man to develop himself to the highest level, to remove bad behavior from him and to become a saint. Human cannot survive without love and virtue. Love and virtue should be the fundamental trait among the people. Manimegalai teaches about the bad qualities found in human beings such as murder, theft, lying and tells people to follow good qualities such as helping the poor and so on. Thus, Manimegalai teaches moral ideas to people and even in today's education system moral ideas are given important.

**Keywords:** Manimegalai, Moral Ideas, Tamil literature, Best Qualities

## முன்னுரை

அறச் சிந்தனையானது சங்க காலம் தொடங்கி இக்காலம் வரை வெளிவந்த இலக்கியங்களில் பல செய்திகளைத் தன்னகத்தே கொண்டுள்ளன. அவ்வகையில் காப்பியக் கால இலக்கியமான மணிமேகலையில் அறச் செய்திகள் நிறைந்துள்ளன. மணிமேகலை ஒரு புத்த சமயக் காப்பியமாக இருந்த போதிலும் அறச் சிந்தனைகளானது மானுட சமுதாயம் அனைவருக்கும் பொதுவானதாக அமைகின்றன. இதே போல் ஒவ்வொரு காலகட்டத்திலும் கல்வியானது பல மாற்றங்களைத் தன்னகத்தே கொண்டு விளங்கி வருவனவாகும். கல்வி போதித்தலில் அறச் செய்திகளும் இடம்பெற்றுள்ளன. அறக்கல்வி, நீதிபோதனைக்கல்வி என்று இன்றும் நம் கல்விமுறையில் இவ்வழக்கம் உள்ளன.

இரட்டைக் காப்பியங்களில் ஒன்றான மணிமேகலை அறக்கருத்துகளின் கருவூலமாக விளங்குகிறது. நல்லொழுக்கங்களை கற்பிக்கும் முறையில் இக்கருத்துக்கள் அமைகின்றன. இக்காப்பியத் தலைவி மணிமேகலை தனக்குத் தீங்கிழைத்த அரசிக்கு நற்கருத்துக்களை எடுத்துக் கூறும் வகையில் இக்கருத்துகள் அமைகின்றன. பசிப்பிணி போக்கும் உயர்ந்த தானமான அன்னதானம் மற்றும் சிறைச்சாலையை அறச்சாலையாக்கி நல்வழிப்படுத்தல் போன்ற பண்புகளை போதிக்கிறது மணிமேகலை எனும் இக்காப்பியம்.

## மணிமேகலையில் அறச் சிந்தனைகள்

மணிமேகலைக் காப்பியமானது ஒரு பௌத்த சமயக் காப்பியம். பௌத்த சமயத்தில் அறம் போதித்தல், நல்வழிகாட்டல் என்பது ஒரு புண்ணியச் செயலாகக் கருதப்படுகிறது. எனவே காப்பியம் எங்கும் பல இடங்களில் அறச்செய்திகள் விரவிக்கிடக்கின்றன. காப்பியத் தலைவியாகிய மணிமேகலை தனக்கு வருகின்ற இடர்களில் இருந்து தப்பிக்கும் செயலானது நுட்பமானதாகும். மணிமேகலைக்குக் கிடைக்கும் அரிய அமுதசுரபியின் வழி அறத்தின் பொருட்டு பல நன்மைகளைச் செய்கிறாள். மணிமேகலையிடம் உள்ள அற மற்றும் பொதுநல உணர்வு வியக்கத்தக்கதாய் உள்ளது. மணிமேகலையின் தாயார் மாதவி இச்செயல்களுக்கு வழிகாட்டி உள்ளார்.

## நல்லொழுக்கக் கல்வி

கல்வி போதிக்கும் பல்வேறு பழக்கங்களுள் நல்லொழுக்கம் என்பது மிகவும் முக்கியமானது. ஒழுக்கக் கல்வி குறித்து தத்துவஞானி வேதாத்திரி மகரிஷியின் கருத்தான, 'கல்வி நான்கு அங்கங்களாக இருக்க வேண்டும். ஒரு பசுவிற்கு நான்கு கால்கள் இருக்கின்றன. அவைகளில் எந்தக் கால் முக்கியம் என்று சொல்ல முடியுமா? அது போல் கல்விக்கும் நான்கு உறுப்புகள் முக்கியம் அவை. எழுத்தறிவு, தொழிலறிவு, இயற்கைத் தத்துவ அறிவு, ஒழுக்க பழக்கங்கள் என்றமைகின்றது (Vethathiri Maharishi, 2012). கல்வியில் உயர் ஒழுக்கங்கள் மற்றும் பழக்க வழக்கங்கள் முக்கியமானது என்பதற்கு இக்கருத்து சான்றாகிறது.

ஒவ்வொரு இலக்கியமும் அதனை இயற்றிய ஆசிரியனின் கவிப்புலமையை வெளி உலகிற்குக் காட்டும்வண்ணம் வெறும் அழகுணர்ச்சி ஒன்றை மட்டும் உடையனவாக அமைதல் கூடாது. அதைப் படிக்கின்ற மக்களுக்கு வாழ்வியலுக்குத் தேவையான நற்கருத்தை இலக்கியத்தின் ஊடு பொருளாகக் கொண்டமைய வேண்டும். அவ்வாறு அமைவதுதான் பிற்காலத்தில் நூல் என்று பேசப்படும். அதனை விடுத்து வெற்றலங்காரக் கருத்துக்குரியதாக அமைந்தால் அவ்வக் காலத்திற்கு மட்டுமே பேசப்படுமே தவிர நெடுங் காலத்திற்கும் பயனளிக்காது. இதனைப் பின்வருமாறு மணிமேகலை மிகச்சரியாகச் சொல்லுகிறது.

## மணிமேகலை கூறும் அறக்கல்வி

தன் மகன் உதயகுமாரனின் சிறப்பிற்குக் காரணம் மணிமேகலை என்று உணர்ந்து கொண்ட இராசமாதேவி சிறையில் அடைபட்டு இருந்த மணிமேகலையைச் சிறையிலிருந்து விடுவித்துத் தன் பொறுப்பில் வைத்து வஞ்சனையாக அவளைக் கொல்லத் திட்டமிடுகிறாள்.

மயக்கமருந்து ஊட்டி மணிமேகலையின் மதியினை மயங்கச் செய்யத் திட்டமிட்டாள். புகையூட்டி அவளைப் பித்தம் கொள்ளச் செய்ய முயன்றாள். காமச் செயலில் ஈடுபட்டாள் என்ற பழிச் சொல்லை உண்டாக்க முயன்றாள். புழுக்கரையில் பூட்டி உணவு தராமல் வாட்டமளித்தாள். இவ்வாறெல்லாம் அரசி செய்த சூழ்ச்சிகளை மணிமேகலை தான் கற்ற மந்திரத்தின் மூலமாக அறிந்து தப்பித்துக் கொள்கிறாள். இதனைக் கண்ட அரசி திடுக்கிட்டுத் தெய்வ ஆற்றல் பெற்றவள் மணிமேகலை என்பதையறிந்து மன்னிப்புக் கேட்டாள். இவ்வாறு கதையினை நகர்த்திச் செல்கின்றார் சீத்தலைச் சாத்தனார். இதன் வாயிலாக அரசமாதேவிக்குச் சொல்வது போல இவ்விலக்கியத்தைப் படிக்கின்ற உலகோரும் உணரும்படி மணிமேகலை வாயிலாக பல்வேறு அறச்செயல் நிகழ்வுகளைக் கூறுகின்றார். அச்செயல்கள் யாவும் மக்கள் பின்பற்றத்தக்க நல்லொழுக்கக் கல்விச் சிந்தனைகளை இலைமறை காயாகவும் ஒரு சில இடங்களில் வெளிப்படையாகவும் உணர்த்துகின்றன.

- ஓர் உயிரிடம் தன்னல நோக்கோடு, தமக்கு வேண்டிய உயிரை மட்டும் நேசிக்காமல் பொதுநல நோக்கோடு எல்லா உயிர்களிடமும் அன்பு செலுத்துதல் வேண்டும்.
- காமம், கொலை, கள், களவு, பொய் முதலியன தீய செயல்களுக்குரிய வித்துக்கள். இதுவே தவறு நிகழக் காரணமாக அமைகின்றன. இதன் காரணமாகத்தான் இவ் உலக மக்கள்

அனைவரும் தீது செய்கிறார்கள். இவை ஒவ்வொன்றாலும் எவ்வாறு தீமை விளைகின்றன என்பதற்கு மணிமேகலை சில குட்டிக் கதைகளைச் சொல்கிறது.

## காமத்தினால் விளைந்த தீமை

காருதல் சாதிப் பெண்ணொருத்தி தவறு செய்து தன் கணவனை விட்டு வெளியேறினாள். மகன் ஒருவனைப் பெற்றுப்போட்டுவிட்டு தன் உடலை விற்று உயிர் வாழ்ந்தாள். அந்தச் சிறுவன் பெரியவனானான். அவன் தன் தாய் என்பதை அறியாது அவளைக் கூடி உறவு கொண்டான். உண்மையை அறிந்தான். உயிர் கெட்டான். இக்கதை காமத்தின் தீமையை உணர்த்துகின்றது.

'ஆள்பவர் கலக்குற மயங்கிய நன்னாட்டுக்

காருக மடந்தை கணவனுங் கைவிட

ஈன்ற குழவியொடு தான்வே றாகி

மான்றோர் திசைபோய் வரையாள் வாழ்வுழில்

புதல்வன் றன்னையோர் புரிநூன் மார்பன்

பதியோ ரறியாப் பான்மையின் வளர்க்க

ஆங்கப் புதல்வன் அவள்திற மறியான்

தான்புணர்ந் தறிந்துபின் நன்னுயிர் நீத்ததும்' (Somasundranaar, 1975)

## கொலையாள் ஏற்பட்ட தீமை

வேடுவன் ஒருவன் கருவுற்ற மானை அம்பினால் வீழ்த்தினான். தாய் இறந்தது. உடனே குட்டி வெளிப்பட்டு துடிதுடித்து பாலுக்காக ஏங்கி உயிர் விட்டது. அந்தக் கொடுமை வேடுவனின் உள்ளத்தினை வாட்டியது. அவனும் மனம் நொந்து உயிர்விட்டான். இக்கதை கொலையால் நிகழ்கின்ற தீமையை உணர்த்துகின்றது.

'நீர்நசை வேட்கையி னெடுங்கட முழலும்

சூன்முதிர் மடமான் வயிறுகிழித் தோடக்

கான வேட்டுவன் கடுங்கனை துரப்ப

மான்மறி விழுந்தது கண்டு மனமயங்கிப்

பயிர்க்குதல் கேட்டதன் பான்மையனாகி

உயிர்ப்பொடு செங்க ணுகுத்த நீர்கண்டு

ஓட்டி யெய்தோ னோருயிர் துறந்ததுங்

கேட்டு மறிதியோ வாட்டடங் கண்ணி' (Somasundranaar, 1975)

## கள் விளைவிக்கும் தீமை

கள்ளுண்டு களித்தோன் அதனால் ஏற்படுகின்ற மயக்கத்தால் மதம் பொருந்திய யானையின் முன்னர் மயங்கிச் சென்று யானைக் கொம்பால் கிழிபட்டு உயிர் மாண்டான். இக்கதையிலிருந்து கள் மயக்கத்தால் விளையும் தீமை உணர்த்தப்படுகிறது.

'கடாஅ யானைமுன் கட்கா முற்றோர்

விடாஅது சென்றதன் வெண்கோட்டு வீழ்வது

உண்ட கள்ளி னுறுசெருக் காவது

கண்டு மறிதியோ காரிகை நல்லாய்' (Somasundranaar, 1975)

## பொய்மை தரும் படிப்பினை

"தன்னெஞ்சறிவது பொய்யற்க" என்பதறியாத சிலர் பொய்ந்நெறிக் கண் ஒழுகுதலைக் கைக்கொள்வர் (Thiruvalluvar, 2013). பொய்த்து உயிர் வாழ்வதென்பது கீழ்மைச் செயலாகும். எஞ்ஞான்றும் உயர்வு பெறுவதே இல்லை. அவர்களை உலகமும் மதிப்பதில்லை.

"பொய்யாற் றொழுக்கம் பொருளெனக் கொண்டோர்

கையாற் றவலங் கடந்தது முண்டோ"

## களவால் அடையும் துன்பம்

களவாகிய ஏரால் உழுதலைச் செய்து வாழ்வோர் அடையும் துன்பத்திற்கு அளவே இல்லை. அது எத்தகைய துன்பத்தைத் தரும் என்பதனைச் சொல்ல வேண்டியதில்லை. உயிர் வாழ்க்கைக்கு இன்றியமையாத உணவினை அளிப்பது உழவுத் தொழில். அதுபோல களவாகிய ஏரினால் உழுது வாழ்வதென்பது பிறர் பொருளைக் கவர்ந்து உண்டு வாழ்வதாகும். இத்தொழில் செய்வோர் கொடியோர் என விளக்கப்படுவர். கடுந்துயர் உற்றுத் துன்பம் அடைவர். இதனால் களவினால் உண்டாகும் தீமையினை உணர்கின்றோம். எனவே இங்கு கூறப்பட்ட காமம், கொலை, களவு, கள், பொய் ஆகியனவற்றைக் கைவிடல் வேண்டும். இவை ஐந்துமே தீய வினைகளுக்குக் காரணமாக அமைகின்றன. இவற்றை விட்டொழிப்பதே நல்லொழுக்கமாகும்.

"களவேர் வாழ்க்கைய ருறூஉங் கடுந்துயர்

இளவேய்ந்த் தோளாய்க் கிதுவென வேண்டா

மன்பே ருலகத்து வாழ்வோர்க் கிங்கிவை

துன்பந் தருவன துறத்தல் வேண்டும்"

என்றமைகின்றது (Somasundranaar, 1975).

## நல்வழி உரைத்தல்

இவ்வுலகப் பிறவியெடுத்ததன் பயன் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்தலாகும். அவ்வாறு வாழும் காலத்தில் பலரும் போற்ற வாழ்வாங்கு வாழ்ந்து சிறக்க மணிமேகலை சில அறச்செயல்களைப் பட்டியலிடுகின்றது. வளம்பொருந்திய பெரிய இந்நிலவுலகத்தில் வாழும் வகையறிந்து வாழ்பவர் என்று சொல்லத்தகுந்தவர் யாரெனில் தமது உள்ளத்தின் கண் வெகுளி தோன்றாமல் முழுவதும் அடக்கியவரும், நன்மை தீமைகளை முழுவதும் ஆராய்ந்தறிந்தவரும், வறுமையால் அல்லலுறுகின்ற மக்களுக்கு உதவுபவரும் ஆவர்

"செற்றஞ் செறுத்தோர் முற்ற வுணர்ந்தோர்

மல்லன்மா ஞாலத்து வாழ்வோ ரென்போர்

அல்லன் மாக்கட் கில்லது நிரப்புநர்"

தாம் செல்லுதற்குரிய மேனிலை உலகத்திற்குச் செல்லும் நெறியறிந்தோர் யாரெனில் பசியினால் துன்புற்றுத் தம்பால் வந்தடைந்த வறியோருடைய ஆற்றுதற்கரிய அப்பசியை தீர்த்தோர் ஆவர் (Somasundranaar, 1975).

"திருந்தே நெல்வளை! செல்லுல கறிந்தோர்

வருந்தி வந்தோர் அரும்பசி களைந்தோர்"

பிறவித்துன்பத்தை அறுத்து உய்தற்குரிய தெளிந்த பொருளை அறிந்தவர் யாரெனில் உயிர்களிடத்திலெல்லாம் அன்பு செலுத்துதலில் ஒழியாத சான்றோர்களே ஆவர் (Somasundranaar, 1975).

"துன்ப மறுக்கும் துணிபொருள் உணர்ந்தோர்

மன்பத்தைக் கெல்லாம் அன்பொழியார்"

என்றுரைக்கின்றது (Somasundranaar, 1975). பௌத்த சமயக் காப்பியமான மணிமேகலை அறம் உரைத்தலை அதிகமாகக் கொண்டுள்ளது. அறப்போதனை வழங்குவது என்பது அச்சமயத்தின் ஒரு சிறந்த தானமாகவே கருதப்பட்டுள்ளது. இதனை, 'புத்தர் பெரும்பாலும் மலைமுகட்டில் நின்று பொது மக்களுக்கு அறம் புகட்டி வந்தார். புத்த மதத்தில் அறப்போதனை வழங்குவது ஒரு சிறந்த தானமாகக் கருதப்பெற்றது. அதனாலேயே பௌத்த மதத்தினர் அறம் புகட்டுதலை முதன்மைப் பணியாக மேற்கொண்டு வந்தனர்" என்ற கூற்றானது மெய்ப்படும்படி பல இடங்களில் அறம் போதிக்கப்பட்டுள்ளது (Palanivel, 1999).

அறிவின் பரிணாம வளர்ச்சி பற்றி நீட்சேயின் கருத்தாக, 'அறிவு என்பது ஞானத்தைக் கண்டறியும் நோக்குடையதல்ல. அது ஒழுங்கற்றவை மீது ஒழுங்கை ஏற்படுத்தும் எந்திரம். நமது பௌதீக - உயிரியல் தேவைகளை, அவற்றை எவ்வாறு பயன்படுத்துவது என்பது பற்றி அறிகிறோம். இறைந்து கிடப்பவற்றின் மத்தியில் ஒத்திசைவை, வரிசையை உண்டாக்குவது நமது அறிவின் பரிணாம வளர்ச்சியாகும்" (ராஜ்கௌதமன், 1992) என்றமைகின்றது. நமது அறிவின் வளர்ச்சியே ஒழுக்கத்தை நமக்குப் போதிக்கிறது. இவ் ஒழுக்கக் கல்வியை மணிமேகலையும் வலியுறுத்துகிறது.

மக்களுக்கு அவரவர் குலத்தொழிலுடன் அறம் போதிக்கப்பட்டிருக்கலாம். ஏனெனில் மணிமேகலை போன்ற அறத்தைப் போதிக்கும் நூல்கள் யாருக்குப் பயன்பட்டிருக்கும்? என்ற வினாவிற்கு மானுடர் அனைவருக்கும் பொதுவானதாகவோ அல்லது அரசர் அந்தணர் தவிர்த்த வணிகர் வேளாளருக்காகவோ என்பதுவே விடையாகும். காப்பியக் காலத்தில் எழுந்த மணிமேகலை பௌத்தக் காப்பியமாக உள்ளதால் அந்தச் சமயப்படி அது ஒரு கடமையாக இருந்திருக்கலாம். ஏனெனில் காப்பியக் காலத்திற்கு முன்பு தோன்றிய நீதி இலக்கியங்கள் பெருவாரியான நீதிகளை நிலைநாட்டியுள்ளதை அறிகின்றோம்.

## முடிவுரை

அறச் சிந்தனைகளானது மனிதன் தோன்றிய காலம் முதலாக விரும்பப்படுகின்ற ஒரு பண்பு நலனாகும். மணிமேகலை சிறந்த அறத்தை வலியுறுத்தும் நூலாகும். மனிதன் கடைபிடிக்க வேண்டிய நல்ல பண்புகளையும் நீக்க வேண்டிய தீய குணங்களையும் காவியத் தலைவி மணிமேகலைவழி இந்த நூல் எடுத்துக்காட்டுகிறது. காமம், கொலை, கள், களவு, பொய் போன்ற தீய குணங்களை மணிமேகலை குட்டிக்குட்டி கதைகள்வழி எடுத்துக்காட்டி உள்ளன. மணிமேகலை காட்டும் அறச் சிந்தனைகளை இக்கட்டுரை உணர்த்துகிறது.

## References

Palanivel, K. (1999) Tamilar Tham Kalvi Varalaru, Paani Veeliyedu, Puducheery, India.

Somasundranaar, P.V. (1975) Manimegalai Moolamum Uraiyum, Kazhaga Veeliyeedu, Chennai, India.

Thiruvalluvar, (2013) Thirukkural, Naatham Geetham Books, Chennai, India.

Vethathiri Maharishi, (2012) Manavalakalai, Yoga, Vethathiri Pathippagam, Chennai, India.

**Funding:** No funding was received for conducting this study.

**Conflict of Interest:** The Author has no conflicts of interest to declare that they are relevant to the content of this article.

**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The Author 2022. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License